

Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

॥ श्रीः ॥

॥ शिवपञ्चाक्षरनक्षत्रमालास्तोत्रम् ॥

சிவ பஞ்சாக்ஷர நக்ஷத்ரமாலா ஸ்தோத்ரம்.

(தொடர்ச்சி ஸத் சம்ப்ரதாயத்தில் இருந்து)

सर्वजीवरक्षणैकशीलिने नमः शिवाय
पार्वतीप्रियाय भक्तपालिने नमः शिवाय ।
दुर्विदग्धदैत्यसैन्यदारिणे नमः शिवाय
शर्वरीशधारिणे कपालिने नमः शिवाय ॥ १५ ॥

ஸர்வஜீவரக்ஷணைகஶீலினே நம꞉ ஶிவாய
பார்வதீப்ரியாய ப⁴க்தபாலினே நம꞉ ஶிவாய |
து³ர்வித³க்³த⁴தை³த்யஸைன்யதா³ரிணே நம꞉ ஶிவாய
ஶர்வரீஶதா⁴ரிணே கபாலினே நம꞉ ஶிவாய ||15||

सर्वजीव {ஸர்வஜீவ} = எல்லா ஜீவர்களையும்; रक्षण {ரக்ஷண} = காப்பாற்றுவதான; एकशीलिने {ஏகஶீலினே} = ஓர் சிறந்த ஸ்வபாவத்தையுடைய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம꞉} = வணக்கம்; पार्वतीप्रियाय {பார்வதீப்ரியாய} = மலையரசனின் பெண்ணான பார்வதீ தேவியிடம் பிரியமுள்ளவனும்; भक्तपालिने {ப⁴க்தபாலினே} = பக்தர்களைக் காப்பாற்றுகின்றவனுமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம꞉} = வணக்கம்; दुर्विदग्ध {து³ர்வித³க்³த⁴} = கர்வங்கொண்ட; दैत्यसैन्य {தை³த்யஸைன்ய} = அரக்கர்களின் படையை; दारिणे {தா³ரிணே} = பிளக்கின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம꞉} = வணக்கம்; शर्वरीश {ஶர்வரீஶ} = சந்திரனை; धारिणे {தா⁴ரிணே} =தன் ஜடையில் அணிந்திருக்கின்றவனும்; कपालिने

{கபாலினே} = மண்டையோட்டை -யுடையவனுமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்.

சிவபெருமான் உலகிலுள்ள ஜீவராசிகளையெல்லாம் காப்பாற்றும் தன்மை வாய்ந்தவர். மலையரசனின் மகளான பார்வதீ தேவியிடம் மிகுந்த பிரியத்தை வைத்திருப்பவர். அவர் பக்தர்கள் அனைவரையும் ரக்ஷிக்கின்றார்: அவர் கர்வமுள்ள அரக்கர்களின் ஸைன்யங்களை அழித்துவிடுகின்றார். இவ்வாறு துஷ்டர்களை நிக்ரஹம் செய்து சிஷ்டர்களைக் காக்கும் பரமேச்வரனை நாம் வணங்குவோமாக.

पाहि मामुमामनोज्ञदेह ते नमः शिवाय
देहि मे वरं सिताद्रिगेह ते नमः शिवाय ।
मोहितर्षिकामिनीसमूह ते नमः शिवाय
स्वेहितप्रसन्न कामदोह ते नमः शिवाय ॥ १६ ॥

பாஹி மாமுமாமனோஜ்ஞதே³ஹ தே நம: ஶிவாய
தே³ஹி மே வரம்’ ஸிதாத்³ரிகே³ஹ தே நம: ஶிவாய |
மோஹிதர்ஷிகாமினீஸமூஹ தே நம: ஶிவாய
ஸ்வேஹிதப்ரஸன்ன காமதோ³ஹ தே நம: ஶிவாய ||16||

उमामनोज्ञदेह {உமாமனோஜ்ஞதே³ஹ} = பார்வதீ தேவியின் மனதை வசீகரிக்கின்ற சரீரத்தையுடையவனே; मां {மாம்} = என்னை; पाहि {பாஹி} = காப்பாற்று; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உனக்கு; नमः {நம:} = வணக்கம்; सिताद्रिगेह {ஸிதாத்³ரிகே³ஹ} = வெண்ணிறமுள்ள வெள்ளிமலையை வீடாக உடையவனே; मे {மே} = எனக்கு; वरं {வரம்} = வரனை; देहि {தே³ஹி} = கொடு; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உனக்கு; नमः {நம:} = வணக்கம்.; मोहित மோஹமடையும்படி செய்யப்பட்ட; ऋषिकामिनीसमूह {ரு’ஷிகாமினீஸமூஹ} = ரிஷி பத்னிகளின் கூட்டத்தையுடையவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உனக்கு; नमः {நம:} = வணக்கம்; स्वेहितप्रसन्न {ஸ்வேஹிதப்ரஸன்ன} = தனக்குப் பிரியமானவர்களிடம் மகிழ்ச்சியடைகின்றவனே; कामदोह {காமதோ³ஹ} = மனோபீஷ்டங்களை நிறைவேற்றுகின்றவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உனக்கு; नमः {நம:} = வணக்கம்.

சிவபெருமான் சிறந்த அழகுவாய்ந்தவன். அவனுடைய அழகினால் மயங்கிய மலைமகள் தன் தாயால் "குழந்தாய் வேண்டாம் उ मा" என்று தபஸ்

செய்வதிலிருந்து தடுக்கப்பட்டும் அப்பரமேச்வரனையே தனது பதியாகப் பெறக் கருதிக் கடுந்தவம் செய்தனள். அவன் வெள்ளி மலையில் வஸித்து வருகின்றான். கடவுளை மறந்து கர்மபாசத்தில் சிக்கி செருக்குற்ற தாருகாவன முனிவர்களை சிக்ஷிக்க ஒருசமயம் அப்பெருமான் திகம்பரனாகத் தன் கையில் மண்டையோட்டை ஏந்தி பிக்ஷாடனத்திற்காக அம்முனிவர்கள் வஸித்துவரும் கானகத்தையடைந்தான். அவ்வமயம் அவரது திருமேனியின் அழகைக் கண்டு ரிஷி பத்னிகள் அனைவரும் மோஹமடைந்தனர். ஈசுவரனுடைய அருள் இல்லாவிடில் காமத்தை வெல்லமுடியாது. சிவபெருமான் தன் பக்தர்கள் முன் பிரஸன்னமாகி அவர்களுக்கு வேண்டிய வரங்களைத் தந்து அவர்களைக் காக்கின்றார். இவ்வாறு விளங்கும் பரமேச்வரனை நாம் வணங்குவோமாக.

मङ्गलप्रदाय गोतुरंग ते नमः शिवाय
गङ्गया तरङ्गितोत्तमाङ्ग ते नमः शिवाय ।
सङ्गरप्रवृत्तवैरिभङ्ग ते नमः शिवाय
अङ्गजारये करेक्कुरङ्ग ते नमः शिवाय ॥ १७ ॥
மங்க^{3}லப்ரதா^{3}ய கோ^{3}துரங்க^3 தே நம꞉ ஶிவாய
க^{3}ங்க^{3}யா தரங்கி^{3}தோத்தமாங்க^3 தே நம꞉ ஶிவாய |
ஸங்க^{3}ரப்ரவ்ரு’த்தவைரிப^{4}ங்க^3 தே நம꞉ ஶிவாய
அங்க^{3}ஜாரயே கரேக்குரங்க^3 தே நம꞉ ஶிவாய ||17||

गोतुरंग காளைமாட்டை வாஹனமாக உடையவனே; मङ्गलप्रदाय மங்களங்களையளிக்கின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உனக்கு; नमः {நம꞉} = வணக்கம்; गङ्गया கங்கையினால்; तरङ्गित அலைகளுடன் கூடிய; उत्तमाङ्ग தலையையுடையவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானான ते {தே} = உனக்கு; नमः {நம꞉} = வணக்கம்; सङ्गरप्रवृत्त சண்டை செய்வதில் ஈடுபட்ட; वैरिभङ्ग பகைவர்களை முறியடிப்பவனே rளவு- சிவபெருமானான உனக்கு எசு- வணக்கம்.-கையில் மானை வைத்துக் கொண்டிருப் பவனே எளர்- மன்மதனுடைய பகைவனான பு-சிவ பெருமானாகிய * - உனக்கு 7 R :- வணக்கம்.

சிவபெருமான் தன்னுடைய வாஹனமான காளைமீது ஏறிக்கொண்டு பக்தர்களுக்கு எல்லா மங்களங்களையும் கொடுக்கின்றான். அவன் தன்னுடைய விரிந்த செஞ் சடையால் கங்கையைத் தாங்கிக்கொண்டிருக்கிறான். கங்கையின் அலைகள் அவனுடைய தலையில் எழுவதால் அவன் பார்ப்பதற்கு மிகவும் மனோகரமாகத் தோன்றுகின்றான். அவன் தன்னுடன் போர் புரிவதில் ஈடுபட்ட

பகைவர்களையெல்லாம் முறியடித்துவிடுகின்றான். தன்னுடைய ஸமாதி நிலையைக் கலைக்கவந்த காமனைத் தனது நெற்றிக்கண்ணிலிருந்து எழும்பிய தீக்கனல்களால் அவன் சுட்டுச் சாம்பலாக்கிறான். தாருகாவனத்து முனிவர்கள் ஆபிசார ஹோமம் செய்து அக்னியிலிருந்து கிளம்பிய மானை சிவனிடம் அனுப்ப உலகினருக்குத் தம் வலிமையைக் காட்ட அம்மானையே பிடித்துக் கையில் வைத்திருக்கின்றார். இவ்வாறு விளக்கும் பரமேச்வரனை நாம் வணங்குவோமாக,

ईहितक्षणप्रदानहेतवे नमः शिवाय
आहिताभिपालकोक्षकेतवे नमः शिवाय ।
देहकान्तिधूतरौप्यधातवे नमः शिवाय
गेहदुःखपुञ्जधूमकेतवे नमः शिवाय ॥ १८ ॥

ஈஹிதக்ஷணப்ரதா³னஹேதவே நம꞉ ஶிவாய
ஆஹிதாபி⁴பாலகோக்ஷகேதவே நம꞉ ஶிவாய |
தே³ஹகாந்திதூ⁴தரௌப்யதா⁴தவே நம꞉ ஶிவாய
கே³ஹது³꞉க²புஞ்ஜதூ⁴மகேதவே நம꞉ ஶிவாய ||18||

ईहितक्षण {ஈஹிதக்ஷண} = விரும்பியகணத்திலேயே; प्रदान {ப்ரதா³ன} = கொடுப்பதற்கு; हेतवे {ஹேதவே} = காரணமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம꞉} = வணக்கம்; आहिताभिपालक {ஆஹிதாபி⁴பாலக} = அக்நிஹோத்ரம் செய்கின்றவர்களைக் காப்பவனே! अक्षकेतवे {அக்ஷகேதவே} = விருஷபக்கொடியோனாகிய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம꞉} = வணக்கம்; देहकान्ति {தே³ஹகாந்தி} = உடலின் ஒளியால்; धूत {தூ⁴த} = நிராகரிக்கப்பட்ட; रौप्यधातवे {ரௌப்யதா⁴தவே} = வெள்ளி யெனும் மூலப்பொருளையுடைய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம꞉} = வணக்கம்; गेह {கே³ஹ} = வீட்டின்; दुःखपुञ्ज {து³꞉க²புஞ்ஜ} = துன்பக் களஞ்சியத்திற்கு; धूमकेतवे {தூ⁴மகேதவே} =வால் நக்ஷத்திரமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம꞉} = வணக்கம்.

சிவபெருமான் நாம் வேண்டும் பொருளை உடனேயே தந்து நம்மை மகிழ்விக்கின்றார், அவர் வேதத்தில் கூறப்பட்டபடி அக்னிஹோத்ரம், யஜ்ஞம் முதலிய கர்மாக்களை செய்பவருக்கு அருள்புரிகின்றார். அவர் விருஷபத்தைத் தன்னுடைய கொடியின் சின்னமாக வைத்துக்கொண்டிருக்கின்றார்.

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

வெண்மையான அவருடைய உடலின் ஒளியில் வெள்ளியின் ஒளி குன்றிவிடுகின்றது. அப்பெருமான் இல்லற வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் இன்னல்கள் எல்லாவற்றையும் நீக்கி நமக்கு வேண்டிய உதவிகளைச் செய்து நம்மை ரக்ஷிக்கின்றார். அவ்வாறு நமக்குப் பற்பல நன்மைகளைச் செய்கின்ற பரமேச்வரனை நாம் வணங்குவோமாக.

त्र्यक्ष दीनसत्कृपाकटाक्ष ते नमः शिवाय
दक्षसप्ततन्तुनाशदक्ष ते नमः शिवाय ।
ऋक्षराजभानुपावकाक्ष ते नमः शिवाय
रक्ष मां प्रपन्नमात्ररक्ष ते नमः शिवाय ॥ १९ ॥

த்ர்யக்ஷ தீ³னஸத்க்ரு'பாகடாக்ஷ தே நம꞉ ஶிவாய
த³க்ஷஸப்ததந்துநாஶத³க்ஷ தே நம꞉ ஶிவாய |
ருக்ஷராஜபா⁴னுபாவகாக்ஷ தே நம꞉ ஶிவாய
ரக்ஷ மாம்' ப்ரபன்னமாத்ரரக்ஷ தே நம꞉ ஶிவாய ||19||

त्र्यक्ष {த்ர்யக்ஷ} = மூன்று கண்களையுடையவரே; दीनसत्कृपाकटाक्ष {தீ³னஸத்க்ரு'பாகடாக்ஷ} = ஏழைகளிடத்தில் நல்ல கருணையுடன் கூடிய கடைக்கண் பார்வையை உடையவரே; शिवाय {ஶிவாய} = மங்கள உருவமுள்ள; ते {தே} = உமக்கு; नमः {நம꞉} = வணக்கம் दक्ष {த³க்ஷ} = தக்ஷனுடைய; सप्ततन्तु {ஸப்ததந்து} = யாகத்தை; नाश {நாஶ} = அழிப்பதில்; दक्ष {த³க்ஷ} = திறமை வாய்ந்தவரே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உமக்கு; नमः {நம꞉} = வணக்கம்; ऋक्षराज {ரு'க்ஷராஜ} = சந்திரன் ; भानु {பா⁴னு} = ஸூர்யன்; पावक {பாவக} = அக்னி இவர்களை; अक्ष {அக்ஷ} = கண்களாக உடையவரே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} =உமக்கு; नमः {நம꞉} = வணக்கம்; प्रपन्नमात्र {ப்ரபன்னமாத்ர} = சரணமடைந்தவர் யாவரையும்; रक्ष {ரக்ஷ} = காக்கின்றவரே; मां {மாம்} = என்னை - காப்பாற்றும்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உமக்கு; नमः {நம꞉} = வணக்கம்.

சிவபெருமான் மூன்று கண்களையுடையவர். சந்திரன். சூர்யன், அக்னி இம்மூன்றும் அவருடைய மூன்று கண்களாக விளங்குகின்றன. அவர் தீனதயாளு. அவர் ஏழைகளைத் தன்னுடைய கடைக்கண்களால் பார்த்து அவர்களுக்கு அனுக்ரஹம் செய்கின்றார். அவர் துஷ்டர்களை நிக்ரஹம் செய்கிறார். தக்ஷன் சிவபெருமானை அவமதித்ததால் அவர் அவனுடைய யாகத்தையழித்து அவனுடைய கர்வத்தையும் ஒழித்தார். அவர் தன்னை

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

அண்டுகின்றவர்களெல்லோரையும் காக்கின்றார். அவ்வாறு விளங்கும் பரமேச்வரனை நாம் வணங்குவோமாக. அவர் நம்மெல்லோரையும் காத்தருளட்டும்.

न्यङ्कुपाणये शिवंकराय ते नमः शिवाय
संकटाब्धितीर्णकिंकराय ते नमः शिवाय ।
कङ्कभीषिताभयंकराय ते नमः शिवाय
पङ्कजाननाय शंकराय ते नमः शिवाय ॥ २० ।।

ந்யங்குபாணயே ஶிவங்கராய தே நம꞉ ஶிவாய
ஸங்கடாப்³தி⁴தீர்ணகிங்கராய தே நம꞉ ஶிவாய |
கங்கபீ⁴ஷிதாப⁴யங்கராய தே நம꞉ ஶிவாய
பங்கஜானனாய ஶங்கராய தே நம꞉ ஶிவாய ||20||

न्यङ्कुपाणये {ந்யங்குபாணயே} = மானைக் கையில் வைத்துக்கொண்டிருப்பவரும்; शिवंकराय {ஶிவங்கராய = நன்மையைச் செய்கின்றவருமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உமக்கு; नमः {நம꞉} = வணக்கம்; संकटाब्धि {ஸங்கடாப்³தி⁴} = ஆபத்தெனும் கடலை; तीर्ण {தீர்ண} = கடந்த; किंकराय {கிங்கராய} = ஸேவர்களையுடைய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உமக்கு; नमः {நம꞉} = வணக்கம்; कङ्कभीषित {கங்கபீ⁴ஷித} = யமனால் பயமுறுத்தப்பட்டவனுக்கு; अभयंकराय {அப⁴யங்கராய} = அபயமளித்துக்காக்கின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய ते {தே} = உமக்கு; नमः {நம꞉} = வணக்கம்; पङ्कजाननाय {பங்கஜானனாய} = தாமரை போன்ற முகத்தை உடையவரும்; शंकराय {ஶங்கராய} = சுபத்தைச் செய்கின்றவருமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உமக்கு; नमः {நம꞉} = வணக்கம்.

சிவபெருமான் தன் கையில் மான் ஒன்றை வைத்துக் கொண்டிருக்கின்றார். அவர் எல்லா லோகங்களுக்கும் நன்மை செய்கின்றார். தனக்குப் பணி செய்வதில் ஈடுபட்டுள்ள பக்தர்களின் இன்னல்களனைத்தையும் தீர்த்து அவர்களைக் காப்பாற்றுகின்றார். யம பயத்தைப் போக்குகின்றார். அவருடைய முகம் தாமரை

போல் அழகுவாய்ந்தது. இவ்வாறு விளங்கும் சிவபெருமானை நாம் வணங்குவோமாக.

कर्मपाशनाश नीलकण्ठ ते नमः शिवाय
शर्मदाय वर्यभस्मकण्ठ ते नमः शिवाय ।
निर्ममर्षिसेवितोपकण्ठ ते नमः शिवाय
कुर्महे नतीर्नमद्विकुण्ठ ते नमः शिवाय ।। २१ ।।
கர்மபாஶநாஶ நீலகண்ட^2 தே நம: ஶிவாய
ஶர்மதா^{3}ய வர்யப^{4}ஸ்மகண்ட^2 தே நம: ஶிவாய ।
நிர்மமர்ஷிஸேவிதோபகண்ட^2 தே நம: ஶிவாய
குர்மஹே நதீர்னமத்^{3}விகுண்ட^2 தே நம: ஶிவாய ||**21**||

कर्मपाशनाश {கர்மபாஶநாஶ} = வினைகளின் பாசத்தையறுக்கின்றவனே; नीलकण्ठ {நீலகண்ட^2} = நீலமான கழுத்தையுடையவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உமக்கு नमः {நம:} = வணக்கம்: वर्यभस्मकण्ठ {வர்யப^{4}ஸ்மகண்ட^2} = சிறந்த திருநீரைக் கழுத்தில் பூசிக்கொண்டவரே; शर्मदाय {ஶர்மதா^{3}ய} = ஸுகத்தைத் தருகின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானான; ते {தே} = உனக்கு; नमः {நம:} = வணக்கம்; निर्ममर्षि {நிர்மமர்ஷி} = மமதையற்ற முனிவர்களால்; सेवितोपकण्ठ {ஸேவிதோபகண்ட^2} = அருகில் ஸேவிக்கப்பட்டவரே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானான; ते {தே} = உமக்கு; नमः {நம:} = வணக்கம். नमद्विकुण्ठ {நமத்^{3}விகுண்ட^2} = விஷ்ணுவால் வணங்கப்பெற்றவரே; ते {தே} = உமக்கு; नतीः {நதீ:} = நமஸ்காரங்களை; कुर्महे {குர்மஹே} = செய்கிறோம்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்

சிவபெருமான் நம்முடைய வினைகளின் பாசத்தையறுத்து நம்மைக் காக்கின்றார். காலகூடவிஷத்தைப் பருகியதால் அவருடைய கழுத்து நீலமாகத் தோன்றுகின்றது. மேலும் திருநீர் அணிந்திருப்பதால் அது வெளுப்பாகவும் காணப்படுகின்றது. தன் அடிபணிந்தவர்களுக்கு க்ஷேமத்தைத் தருகிறார். மமதையைவிட்டு ஒன்றிலும் பற்றில்லாத முனிவர்கள் அவர் அருகில் இருந்து ஸேவிக்கின்றனர். விஷ்ணுவும் சிவனை வணங்கி அவர் அருள் பெறுகிறார். இந்த பரமசிவனைப் பலதடவை வணங்குகிறோம்

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

विष्टपाधिपाय नम्रविष्णवे नमः शिवाय
शिष्टविप्रहृद्गुहाचरिष्णवे नमः शिवाय ।
इष्टवस्तुनित्यतुष्टजिष्णवे नमः शिवाय
कष्टनाशनाय लोकजिष्णवे नमः शिवाय ॥ २२ ॥

விஷ்டபாதி⁴பாய நம்ரவிஷ்ணவே நம: ஶிவாய
ஶிஷ்டவிப்ரஹ்ரு’த்³கு³ஹாசரிஷ்ணவே நம: ஶிவாய |
இஷ்டவஸ்துநித்யதுஷ்டஜிஷ்ணவே நம: ஶிவாய
கஷ்டநாஶனாய லோகஜிஷ்ணவே நம: ஶிவாய ||22||

विष्टपाधिपाय {விஷ்டபாதி⁴பாய} = உங்களுக்குத் தலைவனாயும்; नम्रविष्णवे {நம்ரவிஷ்ணவே} = வணங்குகின்ற விஷ்ணுவையுடையவனாயும் இருக்கின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; शिष्ट {ஶிஷ்ட} = ஸதாசார ஸம்பன்னர்களான; विप्र {விப்ர} = அந்தணர்களுடைய; हृद् {ஹ்ரு’த்³} = ஹ்ருதயமாகிய; गुहाचरिष्णवे {கு³ஹாசரிஷ்ணவே = குஹையில் ஸஞ்சரிக்கின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; इष्टवस्तु {இஷ்டவஸ்து} = விரும்பிய பொருள் கிடைப்பதால்; नित्यतुष्ट {நித்யதுஷ்ட} = எப்பொழுதும் மகிழ்ச்சியடைந்த; जिष्णवे {ஜிஷ்ணவே} = இந்திரனை உடைய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; कष्टनाशनाय {கஷ்டநாஶனாய} = இன்னல்களை அழிக்கின்றவனாயும்; लोकजिष्णवे {லோகஜிஷ்ணவே} = எல்லா உலகங்களையும் ஜயிக்கின்றவனுமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்.

சிவபெருமான் ஒருவனே மூன்று உலகங்களுக்கும் அதிபதி. எல்லாவற்றையும் ஜயித்தவன். மகாவிஷ்ணுவும் கூட அவனுக்குப் பணிகின்றார். அவன் நல்ல ஆசாரத்தை அனுஷ்டிக்கின்ற அந்தண சிரேஷ்டர்களின் இதயத்தில் எப்பொழுதும் வஸிக்கிறான். சிவன் அருளால் தான் விரும்பிய பொருள்கள் எல்லாவற்றையும் அடைந்து தேவேந்திரன் எப்பொழுதும் இன்பம் அடைகிறான். அடியார்களின் துன்பங்களைப் போக்குகிறான். இந்த சிவபெருமானுக்கு வணக்கம்.

अप्रमेयदिव्यसुप्रभाव ते नमः शिवाय
सत्प्रपन्नरक्षगस्वभाव ते नमः शिवाय ।
स्वप्रकाश निस्तुलानुभाव ते नमः शिवाय

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

विप्रडिम्भदर्शितार्द्रभाव ते नमः शिवाय ।। २३ ।।

அப்ரமேயதி³வ்யஸுப்ரபா⁴வ தே நம: ஶிவாய
ஸத்ப்ரபந்நரக்ஷக³ஸ்வபா⁴வ தே நம: ஶிவாய |
ஸ்வப்ரகாஶ நிஸ்துலானுபா⁴வ தே நம: ஶிவாய
விப்ரடி³ம்ப⁴த³ர்ஶிதார்த்³ரபா⁴வ தே நம: ஶிவாய ||23||

अप्रमेय {அப்ரமேய} = அளவிடமுடியாத; दिव्यसुप्रभाव {தி³வ்யஸுப்ரபா⁴வ} = திவ்யமான சிறந்த பராக்ரமத்தையுடையவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உமக்கு नमः {நம:} = வணக்கம்; सत्प्रपन्नरक्षगस्वभाव {ஸத்ப்ரபந்நரக்ஷக³ஸ்வபா⁴வ} = தன்னை யண்டிய நல்ல மனிதர்களைக் காப்பாற்றும் தன்மை வாய்ந்தவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உமக்கு नमः {நம:} = வணக்கம்; स्वप्रकाश {ஸ்வப்ரகாஶ} = தன்னைத்தானே பிரகாசப்படுத்திக் கொள்பவனே; निस्तुलानुभाव {நிஸ்துலானுபா⁴வ} = இணையற்ற மஹிமை பெற்றவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உமக்கு नमः {நம:} = வணக்கம்; विप्रडिम्भ {விப்ரடி³ம்ப⁴} = பிராமணனுடைய குழந்தையிடம்; दर्शित {த³ர்ஶித} = காட்டப்பட்ட; आर्द्रभाव {ஆர்த்³ரபா⁴வ} = கருணையையுடையவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உமக்கு नमः {நம:} = வணக்கம்.

சிவபெருமான் மிகுந்த பலம் வாய்ந்தவர். அவர் தன்னை யண்டிய அனைவரையும் புனிதர்களாகச் செய்து அவர்களைக் காத்தருள்கிறார். அவர் ஸ்வயம் ஜ்யோதிஸ்வரூபர். உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் அவரே தனது ஒளியால் விளங்கவைக்கிறார். மேலும் அவருடைய தேஜஸாலேயே அவர் விளங்குகின்றார். அவருடைய மஹிமைக்கு ஒப்பானது ஒன்றுமே இல்லை. அவர் அந்தணகுமாரனாகிய மார்க்கண்டேயனுக்கு இரக்கம் காட்டி அவனைக் காலனிடமிருந்து காப்பாற்றினார். இவ்வாறு மஹிமையுடன் விளங்கும் சிவ பெருமானை நாம் வணங்குவோமாக.

सेवकाय मे मृड प्रसीद ते नमः शिवाय
भावलभ्य तावकप्रसाद ते नमः शिवाय ।
पावकाक्ष देवपूज्यपाद ते नमः शिवाय
तावकाङ्घिभक्तदत्तमोद ते नमः शिवाय ॥ २४ ॥

ஸேவகாய மே ம்ரு'ட³ ப்ரஸீத³ தே நம: ஶிவாய

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

பா⁴வலப்⁴ய தாவகப்ரஸாத³ தே நம: ஶிவாய |
பாவகாக்ஷ தே³வபூஜ்யபாத³ தே நம: ஶிவாய
தாவகாங்கி⁴ப⁴க்தத³த்தமோத³ தே நம: ஶிவாய ||24||

मृड {ம்ருʼட³} = இன்பத்தைத்தரும் பரமேச்வரனே; सेवकाय {ஸேவகாய = உனக்குப் பணிசெய்கிறவனான ; मे {மே} = எனக்கு; प्रसीद {ப்ரஸீத³} = அனுக்ரஹம் செய்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானான; ते {தே} = உனக்கு; नमः {நம:} =வணக்கம்; भावलभ्य {பா⁴வலப்⁴ய} = தூயமனம் உள்ளவர்களால் அடையத்தகுந்த; तावकप्रसाद {தாவகப்ரஸாத³} = உங்களுடைய அநுக்ரஹத்தை உடையவரே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உமக்கு नमः {நம:} = வணக்கம்; पावकाक्ष {பாவகாக்ஷ} = அக்னியைக் கண்ணாகக்கொண்டவரே; देवपूज्यपाद {தே³வபூஜ்யபாத³} = தேவர்களால் பூஜிக்கத்தக்க பாதங்களையுடையவரே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உமக்கு नमः {நம:} = வணக்கம்; तावकाङ्घिभक्त {தாவகாங்கி⁴ப⁴க்த} = உன்னுடைய பாதகமலங்களில் பக்தி செலுத்துகின்றவர்களுக்கு; दत्त {த³த்த} = கொடுக்கப்பட்ட; मोद {மோத³} = ஆனந்தத்தையுடையவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உமக்கு नमः {நம:} = வணக்கம்.

சிவபெருமான் தனக்குப் பணியாற்றும் ஸேவகர்களுக்கு அநுக்ரஹம் செய்கின்றார். அதிலும் தூய மனத்துடன் உங்களைப் போற்றுபவருக்குத்தான் உங்கள் அருள் கிடைக்கும். "आभ्यन्तरवृत्तिमात्ररलिकः बाह्यानपेक्षः" என்கின்றார் ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர். 'भावग्राह्मं' என்று சுவேதாச்வதர உபநிஷத் கூறுகிறது. அவர் அக்னியைக் கண்ணாக உடையவர். அவருடைய அநுக்ரஹத்தைப் பெறுவதற்காகத் தேவர்களும் அவருடைய பாதங்களைப் போற்றுகின்றனர். தன்னுடைய திருவடிகளில் பக்தி செலுத்துகின்றவர்களிடம் இரக்கம் காட்டி பரமேச்வரன் அவர்களுக்கு மிகுந்த இன்பத்தைத் தந்தருள்கிறார். இவ்வாறு விளங்கும் பரமேச்வரனை நாம் வணங்குவோமாக.

भुक्तिमुक्तिदिव्यभोगदायिने नमः शिवाय
शक्तिकल्पितप्रपञ्चभागिने नमः शिवाय |
भक्तसंकटापहारयोगिने नमः शिवाय
युक्तसन्मनःसरोजयोगिने नमः शिवाय ॥ २५।।
பு⁴க்திமுக்திதி³வ்யபோ⁴க³தா³யினே நம: ஶிவாய
ஶக்திகல்பிதப்ரபஞ்சபா⁴கி³னே நம: ஶிவாய |

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ப⁴க்தஸங்கடாபஹாரயோகி³னே நம: ஶிவாய
யுக்தஸன்மன:ஸரோஜயோகி³னே நம: ஶிவாய ||25||

भुक्तिमुक्ति {பு⁴க்திமுக்தி} = இவ்வுலகிலுள்ள ஸுகம், மோக்ஷம்; दिव्यभोग {தி³வ்யபோ⁴க³} = தேவபோகம் இவைகளை; दायिने {தா³யினே} = கொடுத்தருளும்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; शक्तिकल्पित {ஶக்திகல்பித} = தன்னுடைய மாயையால் தோற்றுவிக்கப்பட்ட; पञ्च {பஞ்ச} = பிரபஞ்சத்தில்; भागिने {பா⁴கி³னே} = பாகமுடைய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; भक्त {ப⁴க்த} = பக்தர்களுடைய; संकट {ஸங்கட} = கஷ்டங்களை; अपहार {அபஹார} = போக்கு வதில்; योगिने {யோகி³னே} = ஈடுபட்டுள்ள; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; युक्त {யுக்த} = தன்னிடத்தில் பக்தி வைத்துள்ள; सन्मनःसरोज {ஸன்மன:ஸரோஜ} = நல்ல மனிதர்களின் மனமாகிற தாமரையில்; योगिने {யோகி³னே} = சேர்ந்திருக்கின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்

சிவபெருமான் தன்னுடைய பக்தர்களுக்கு அவரவர் வேண்டுகின்றபடி இவ்வுலகில் ஸுகத்தையும் தேவலோக ஸுகத்தையும் மோக்ஷத்தையும் தந்தருள்கின்றார். அவரே பரம்பொருள். விகாரமற்றவர். அவ்வாறு மாறுதலற்ற வராக இருப்பினும் அவர் தன்னுடைய மாயா சக்தியால் தன்னிடத்திலேயே பற்பல மாறுபாடுகள் வாய்ந்த இவ்வுலகனைத்தையும் தோன்றும்படி செய்கின்றார். இதைக் கொண்டு அறியாதவர் சிவன் உலகைப் படைத்ததாகக் கூறுகின்றனர். மாயையால் தோன்றும் பிரபஞ்சம் பொய். அதை ஈசுவரன் படைத்தார் என்பதும் வாஸ்தவம் அல்ல. அவர் தன்னுடைய பக்தர்களுக்கு ஏற்படும் இன்னல்களை யெல்லாம் களைந்து அவர்களுக்கு அருள்புரிவதிலேயே ஈடுபட்டவர். மேலும் அவர் தன்னைத் தியானம் செய்யும் மஹான்களுடைய ஹ்ருதயகமலத்தில் என்றும் வாஸம் செய்துகொண்டிருக்கின்றார். இவ்வாறு தோன்றும் பரமேச்வரனை நாம் என்றும் பணிவோமாக.

अन्तकान्तकाय पापहारिणे नमः शिवाय
शन्तमाय दन्तिचर्मधारिणे नमः शिवाय ।
संतताश्रितव्यथाविदारिणे नमः शिवाय
जन्तुजातनित्यसौख्यकारिणे नमः शिवाय ।। २६ ।।

அந்தகாந்தகாய பாபஹாரிணே நம: ஶிவாய

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஶந்தமாய த³ந்திசர்மதா⁴ரிணே நம: ஶிவாய |
ஸந்ததாஶ்ரிதவ்யதா²விதா³ரிணே நம: ஶிவாய
ஜந்துஜாதநித்யஸௌக்²யகாரிணே நம: ஶிவாய ||26||

अन्तकान्तकाय {அந்தகாந்தகாய} = யமனுக்கு யமனாயும்; पापहारिणे {பாபஹாரிணே} = பாபத்தைப் போக்குகின்றவருமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; शन्तमाय {ஶந்தமாய} = பரமானந்த ரூபியாயும்; दन्ति {த³ந்தி} = யானையின்; चर्म {சர்ம} = தோலை; धारिणे {தா⁴ரிணே} = அணிந்துகொண்டிருப்பவருமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; संतताश्रित {ஸந்ததாஶ்ரித} = தன்னை எப்பொழுதும் அண்டியவர்களின்; व्यथा {வ்யதா²} = துன்பத்தை; विदारिणे {விதா³ரிணே} = பிளக்கின்றவரான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; जन्तुजात {ஜந்துஜாத} = எல்லாப் பிராணிவர்க்கங்களுக்கும்; नित्य {நித்ய} = அழிவற்ற; सौख्य {ஸௌக்²ய} = இன்பத்தை; कारिणे {காரிணே} = செய்கின்றவரான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்.

சிவபெருமான் யமனையும் கொன்றவர். ஸகல பாபங்களையும் அழிக்கின்றவர். ஆனந்தஸ்வரூபி. யானையின் தோலையணிந்திருப்பவர். தன்னையே என்றும் சரணமடைந்து நிற்கும் பக்தர்களின் துன்பங்கள் அனைத்தையும் தீர்க்கும் தன்மை வாய்ந்தவர். உலகத்திலுள்ள ஸகலவிதமான ஜீவஜந்துக்களுக்கும் அழிவற்ற ஸுகத்தையளிப்பவர். இவ்வாறு விளங்கும் சிவபெருமானை நாம் என்றும் வணங்குவோமாக.

शुलिने नमो नमः कपालिने नमः शिवाय
पालिने विरिश्चिमुण्डमालिने नमः शिवाय ।
लीलिने विशेषरुण्डमालिने नमः शिवाय
शीलिने नमः प्रपुण्यशालिने नमः शिवाय ॥ २७ ॥

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஶூலினே நமோ நமஃ கபாலினே நமஃ ஶிவாய
பாலினே விரிஸ்சிமுண்ட³மாலினே நமஃ ஶிவாய |
லீலினே விஶேஷருண்ட³மாலினே நமஃ ஶிவாய
ஶீலினே நமஃ ப்ரபுண்யஶாலினே நமஃ ஶிவாய ||**27**||

शूलिने சூலமென்ற ஆயுதத்தையுடைய சிவபெருமானுக்கு; नमो नमः பன்முறை வணக்கம். कपालिने மண்டை யோட்டை வைத்திருக்கும்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நமஃ} = வணக்கம்; पालिने உலகங்களை ரக்ஷிக்கும் தன்மைவாய்ந்தவனும்; विरिश्चिमुण्डमालिने பிரம்மதேவரின் தலைகளை மாலையாகத் தரித்துக்கொண்டிருப்பவனுமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நமஃ} = வணக்கம்; लीलिने லீலையுடன் கூடியவரும்; विशेषरुण्डमालिने விசேஷமான தலையில்லா உடல்களின் வரிசையை உடையவனுமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நமஃ} = வணக்கம்; शीलिने நல்ல ஸ்வபாவத்தையுடையவனான சிவபெருமானுக்கு; नमः {நமஃ} = வணக்கம். प्रपुण्यशालिने மிகுந்த புண்யத்தால் விளங்கும்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நமஃ} = வணக்கம்.

சிவபெருமான் தன்னுடைய கைகளில் சூலத்தையும் மண்டையோட்டையும் வைத்துக்கொண்டிருக்கிறார். அவர் தன்னுடைய பக்தர்களைக் காக்கின்றார். பிரம்மதேவரின் தலையைக் கொய்து அதையே தமக்கு அணிகலமாக அமைத்துக்கொண்டிருக்கிறார். தலையில்லா உடல்களையும் தனியாக வைத்துக்கொண்டிருக்கிறார். இத்தனை பயங்கர வேஷமிருந்தும் இது எல்லாம் அவருக்கு விளையாட்டுத்தான். இவை இருந்தும் அவர் பரிசுத்தர். நல்ல ஸ்வபாவம் உள்ளவர். எல்லோரையும் காப்பாற்றுபவர். இவ்வாறு விளங்கும் சிவபெருமானை நாம் வணங்குவோமாக.

शिवपञ्चाक्षरमुद्राचतुष्पदोल्लासपद्यमणिघटिताम् ।
नक्षत्रमालिकामिह दधदुपकण्ठं नरो भवेत्सोमः ।॥ २८ ॥
ஶிவபஞ்சாக்ஷரமுத்³ராசதுஷ்பதோ³ல்லாஸபத்³யமணிக⁴டிதாம் |
நக்ஷத்ரமாலிகாமிஹ த³த⁴து³பகண்ட²ம்' நரோ ப⁴வேத்ஸோமஃ ||**28**||

शिवपञ्चाक्षरमुद्रा {ஶிவபஞ்சாக்ஷரமுத்³ரா} = சிவபஞ்சாக்ஷரம் என்ற முத்திரை உள்ள; चतुष्पद {சதுஷ்பத³} = நான்கு அடிகளுடன்; उल्लास {உல்லாஸ} = சிறந்து

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

விளங்குகின்ற; पद्यमणि {பத்³யமணி} = பாக்களாகிய ரத்னங்களால்; घटिताम् {க⁴டிதாம்} = செய்யப் பட்டதான; नक्षत्रमालिकां {நக்ஷத்ரமாலிகாம்} = அழகிய நக்ஷத்ர மாலையை (இருபத்தேழு ஸ்தோத்ரங்கள் உள்ள இந்த சிவபஞ்சாக்ஷர நக்ஷத்ர மாலையை); इह {இஹ} = இங்கு; उपकण्ठं {உபகண்ட²ம்} = கழுத்தில்; दधत् {த³த⁴த்} = அணிந்துகொண்டு; नरः {நர:} = மனிதன்; सोमः {ஸோம:} = உமையுடன்கூடிய பரமசிவனாக; भवेत् {ப⁴வேத்} =ஆவான்.

இந்த சுலோகத்தில் பலச்ருதி கூறப்படுகின்றது சிவ பஞ்சாக்ஷர நக்ஷத்ரமாலா ஸ்தோத்ரம் என்று இந்த ஸ்துதிக்குப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. நக்ஷத்திரமாலையென்பதற்கு இரண்டு பொருள். ஒன்று நக்ஷத்திரங்களின் வரிசை, இரண்டு இருபத்தேழு ரத்னங்களால் செய்யப்பட்ட மாலை. सैव नक्षत्रमाला स्यात्सप्तविंशतिमौक्तिकैः என்பது இதன் லக்ஷணம். இந்த ஸ்தோத்ரத்தில் இருபத்தேழு சுலோகங்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு சுலோகமும் ஓர் ரத்னம். இவ்வாறு இருபத்தேழுரத்னங்கள் இதில் இருப்பதால் இந்த ஸ்தோத்திரத்தின் பெயர் மிகப் பொருத்தமாக அமைந்திருக்கின்றது. இந்த ஸ்தோத்திரத்தில் சிவ பஞ்சாக்ஷரம் என்ற முத்திரை வைக்கப்பட்டிருக்கின்றது. நான்கு அடிகள் கொண்ட ஒவ்வொரு சுலோகத்திலும் ஒவ்வொரு அடியின் கடைசியிலும் இந்த பஞ்சாக்ஷரம் இருப்பதைக் காணலாம். இந்த பஞ்சாக்ஷர ரத்னமாலை மிகச்சிறப்பு வாய்ந்தது. இம் மாலையிலுள்ள ஒவ்வொரு ரத்னத்திலும் நான்கு பக்கங்களிலும் மிகச்சிறந்த மந்த்ரராஜமான பஞ்சாக்ஷர முத்திரை பொறிக்கப்பட்டிருப்பது விசேஷமல்லவா!

தனது மனைவியர்களான இருபத்தேழு நக்ஷத்திரப் பெண்களின் வரிசையை அருகில் வைத்துக்கொண்டு பிரகாசிப்பவன் ஸோமன் (சந்திரன்). சிறந்த ரத்னங்களால் அமைக்கப்பெற்ற நக்ஷத்திர மாலையைக் கழுத்தில் அணிந்து கொள்பவனும் ஸோமனை (சந்திரனை)ப்போல் பார்ப்பவர் மனதையும்

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

கண்களையும் கவரும்படியாக மிக்க அழகுடன் விளங்குவான். ஆனால் ஒவ்வொரு அடியிலும் பஞ்சாக்ஷர முத்திரை பதிப்பிக்கப்பெற்ற இருபத்தேழு சுலோக ரத்னங்கள் கொண்ட இந்த 'சிவபஞ்சாக்ஷர நக்ஷத்ரமாலா' ஸ்தோத்திரத்தைக் கழுத்தில் அணிபவன் அதாவது மனப்பாடம் செய்து எப்பொழுதும் வாயால் சொல்கிறவன் ஸோமனாக, உமையுடன் கூடிய பரமேசுவரனாக ஆகிவிடுவான். பக்தியுடன் பாராயணம் செய்கின்றவனுக்கு சிவஸாரூப்யம் கிடைக்கும்.

சிவ பஞ்சாக்ஷர நக்ஷத்ரமாலா ஸ்தோத்திரம் முற்றிற்று

நன்றி : ஸ்ரீமதி லிங்கம்மாள் ராமராஜு சாஸ்த்ரப்ரதிஷ்ட்டா டிரஸ்ட், இராஜபாளையம்.

Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்